## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.47/2024

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜம்மாள் | மதம் | : இந்து |
| க/பெ | : முனிரத்தினம் | ஜாதி | : -- |
| வயது | : 60 | கிராமம் | : வேளஞ்சேரி |
| தொழில் | : இல்லத்தரசி | வட்டம் | : திருத்தணி |

**21.01.2026**
**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையதுதான். 11.12.1973ம் தேதியிட்டு நரசிம்ம பண்டிதர் எனக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் அசல் மற்றும் அதன் தமிழ் மொழிபெயர்ப்பு தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.341ல் என் அம்மா மற்றும் என் பெயரில் உள்ள கூட்டு பட்டா தாக்கல் செய்கிறேன். **(கூட்டு பட்டா வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)